பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 15 திங்கட்கிழமை (29-01-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 64

# ஸ்ரீலங்காவுக்கு உதவுவதை கண்டிக்கின்றது தி.மு.க.!

## மோதல்

அம்பாறை மாவட்டம் புல்குடா என்னும் இடத்தில் அம்பறை - கண்டி வீதியில் கடந்த வியாழக்கிழமையன்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடப்பெற்றுள்ளது

இந்த மோதல் 2 மணி நேரம் நீடித்தது. இந்த மோதலின் போது ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. [உ-7]

## இந்திய மத்திய அரசுக்கு எதிராக திருச்சி மாநாட்டில் தீர்மானம்

திருச்சி, ஜனவரி. 29

★ ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திவரும் தாக்குதல்களைக் கண்டனம் செய்யாததற்காக இந்திய மத்திய அரசைக் கண்டிக்கிறோம்.

★ ஸ்ரீலங்கா அரசுக்கு இந்திய அரசு எந்த வகையிலும் உதவி செய்யக் கூடாது;

— இவ்வாறு கோரும் தீர்மானங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருச்சி மாநாட்டில் நேற்று நிறைவேற்றப்பட்டன.

தி. மு. காவின் எட்டாவது மாநில மாநாடு கடந்த வெள்ளியன்று திருச்சியில் ஆரம்பமானது.

நேற்று மாநாட்டின் இறுதி நாள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஈழப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிட்ட வேண்டும் என்ற அக்கறையை இந்திய அரசு கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்து மாநாட்டுத் தீர்மானம் மத்திய அரசைக் கண்டனம் செய்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இணுவில் மோதலில் 6 படையினர் காயம்

சாவகச்சேரி, ஜன. 29

கடந்த வெள்ளிக்கிழமை இணுவில் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் ஆறு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாக தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் கப்டன் சிவானி (மதுரநாயகம் சந்திரகலா - வவுனியா), லெப்டினன்ட் கில்மன் அல்லது தீபன் (இராஜேந்திரன் போமனிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ராணுவத் தளபதியாக ஜெனிரல் அசோகா ஜெயவர்த்தனா நியமனம்?

கொழும்பு, ஜன. 29

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தற்போதைய தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா எதிர்வரும் மே 31ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்வதை அடுத்து—

ஜூன் முதலாம் திகதி தொடக்கம், தற்போது மேஜர் ஜெனரலாக இருக்கும் அசோக ஜெயவர்த்தன இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவார் என அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதைய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவுக்கு அடுத்து — சேவை மூப்பில் மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்தையும் அதனைத் தொடர்ந்து மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவும் உள்ளனர்.

ஆனால் தற்போதைய இராணுவத் தளபதி ஓய்வு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினை: கிறீஸ் மாநாட்டில் ஆராய்வு

கொழும்பு, ஜன. 29

கிறீஸில் நடைபெறும் ''ஜனநாயகம், அரசமைப்பு, நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்துதல்'' சம்பந்தமான மாநாட்டில்—

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

ஸ்ரீலங்கா சமாதானக் கவுன்ஸிலின் ஆதரவுடன் லண்டனில் உள்ள அமைப்பு ஒன்றினால் நடத்தப்படும் மாநாட்டில் ஸ்ரீலங்காவிலிருந்து இருபது எம்.பிக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிக்கராகுவாவில் சமாதானத் தீர்வைக் கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட பிரமுகர்கள், தென் ஆபிரிக்க அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதில் தீவிரமாகப் பங்கு கொண்ட பிரமுகர்கள் இந்த மாநாட்டில் உரையாற்ற உள்ளனர். (அ)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## 23 நாள்களினால் தளபதி பதவியை கோட்டை விடுகிறார் தளுவத்தை!

கொழும்பு, ஜன. 29

மேஜர் ஜெனரல் றோஹான் தளுவத்தை 23 நாள்களினால் இராணுவத் தளபதி பதவியைக் கோட்டை விடும் நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தின் உயர்பதவிகளில் ஒரு தரத்தை அடையும் அதிகாரி குறிப்பிட்ட ஒரு வயதை அடைவதற்கு முன்னர் அடுத்த தரத்துக்கு பதவிஉயர்வு பெறாவிட்டால் அந்தக் குறிப்பிட்ட வயதை அடைந்ததும் அவர் ஓய்வு பெற்றுச் சென்றாக வேண்டும் என்பது ஒழுங்கு விதியாகும்.

இதன்படி—

மேஜர் ஜெனரல் தரத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கான ஓய்வு பெறும் வயது எல்லை 55 ஆகும்.

ஸ்ரீலங்கா இராணுவத்தில் சேவை மூப்பு விடயத்தில் இராணுவத் தளபதிக்கு அடுத்த இடத்தைப் பிடித்திருக்கும் மேஜர் ஜெனரல் றொஹான் தளுவத்தை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஐ.தே.க. அரசுகள் வாங்கிய விமானங்கள் கடலின் கீழ்!

### அக்கட்சியின் செயலர் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 29

போரில் வெல்ல வேண்டும் என்பதற்காக எமது ஆட்சிக் காலத்தில் நவீன ஆயுதங்களைத் தருவித்தோம். நவீன விமானங்களைத் தருவித்தோம். ஆனால் அவை இன்று கடலுக்குள்ளேயே காணப்படுகின்றன.

— இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக் கோறளை.

ஹொறணையில் நடைபெற்ற களுத்துறை மாவட்ட ஐ. தே. க. சமமேளனக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

1977 இல் எமது கட்சி ஆட்சியைப் பொறுப்பேற்ற போது நவீன ஆயுதங்கள் ஒன்று கூட இருக்கவில்லை. எமது ஆட்சிக் காலத்திலேயே நவீன ஆயுதங்களை வாங்கினோம்.

பாதுகாப்பு அமைச்சரும், ஜனாதிபதியும் கிழக்கில் இருந்த படையினரை வடக்கு மாகாணத்துக்கு கொண்டு சென்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். ஆனால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில்

## பொ. ஐ. முன்னணியுடன் இணைந்து போட்டியிட இ. தொ. கா. முடிவு!

கொழும்பு, ஜன. 24

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போட்டியிடும்.

இ. தொ. காவின் உயர்வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

மலையகத்தில் உள்ள ஏனைய தமிழ் தொழிற்சங்கங்களைக் கூட்டுச் சேர்த்து தனி அணியாகப் போட்டியிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த இ. தொ. கா. இப்போது தனது திட்டத்தை மாற்றி பொ. ஐ முன்னணியில் இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளது.

ஜானாதிபதி சந்திரிகாவுடன் இ. தொ. கா. தலைவர் தொண்டமான் — இரண்டாவது தடவையாக — கடந்த திங்களன்று சந்தித்துப் பேசியதை அடுத்து இ. தொ. காங்கிரஸின் திட்டம் மாற்றியமைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தனித்துப் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் முடிவு

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தே போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் மூத்த துணைத் தலைவர் அல்ஹாஜ் மருதூர்க்கனி பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

தனித்துவமான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உள்ளூராட்சித் தேர்தல்களில் தனித்தே போட்டியிடும் என்றும் —

அதேவேளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பங்காளிகளாக இருக்கும் வரை உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவளிப்போம் என்றும்—

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார். (உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லியடியில்,

27 — 1 — 96 முதல் இயங்குகின்றது!

யாழ் மெடி கிளினிக்
(YARL MEDI CLINIC)

★ நோயாளரின் வசதி கருதி நெல்லியடி மத்திய பேருந்து நிலையத்துக்கு மிகச் சமீபமாக கொடிகாமம் வீதியில் அமைந்துள்ளது.

★ யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்களினால் தினசரி பி ப. 4.00 — 8.00 வரை நோயாளர்கள் பார்வையிடப்படுவர்.

★ முன்கூட்டியே பதிவுகள் மூலம் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை வேறு நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

— நிர்வாக இயக்குனர்.

(சி/3193)


# ஆசிரிய சம்பள உயர்வுப் படியை வழங்க ஆசிரியர் சங்கம் வற்புறுத்து

சாவகச்சேரி, ஜன. 29

ஆசிரியர் சம்பள உயர்வுக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ். கல்விப் பணிப்பாளர்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

1995 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்தச் சம்பள உயர்ச்சியை யாழ். மாவட்டத்திலுள்ள மிகப் பெரும்பாலான ஆசிரியர்கள் 1996 ஆம் ஆண்டு ஆரம்பித்தும் பெற முடியவில்லை. இந்நிலையைச் சீர்செய்யுமாறு சங்கம் பல கட்டங்களில் கல்விப் பணிப்பாளர்களை வற்புறுத்திக் கேட்டிருந்தும் திணைக்களம் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

திணைக்கள பணிப்பாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் தமது 1995 ஆம் ஆண்டுக்கான வருடாந்தச் சம்பள உயர்ச்சியை உரிய நேரத்தில் பெற்றது மாத்திரமல்ல 1996 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்தச் சம்பளப்படி உயர்ச்சியையும் ஜனவரி 96 சம்பளத்துடன் பெறவுள்ள நிலையில்—

ஆசிரியர்கள் தமது 95 ஆம், 96 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்தச் சம்பளப்படி உயர்ச்சியை பெப்ரவரி 96 சம்பளத்துடன் நிலுவைகளுடன் பெற ஆவன செய்யுமாறு யாழ். கல்விப் பணிப்பாளர்கள் இருவரிடமும் எமது சங்கம் கோருகின்றது. அவ்வாறு கிடைக்காத பட்சத்தில் ஆசிரியர்கள் நேரடிப் போராட்டத்தில் இறங்குவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

ஆசிரியர்கள் பலர் இலங்கை ஆசிரிய சேவையில் உள்வாங்கப்படாமலும், பிழையாக உள்வாங்கப்பட்டும் உள்ளனர். இக்குறைபாட்டை நீக்குவது தொடர்பான சுற்றுநிருபங்களை ஆசிரிய சங்கம் கல்வி உயர் கல்வி அமைச்சில் இருந்து பெற்றுக் கொண்டு வந்து கொடுத்து பல மாதங்கள் கழிந்தும் கல்வித்திணைக்களம் இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இவ்விடயங்களையும் பணிப்பாளர்கள் சீர் செய்து பெப்ரவரி 96 ஆம் மாதச் சம்பளப் பட்டியலில் உரிய சம்பளத்தையும் கிடைக்க வேண்டிய நிலுவைகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## திருட்டு

வடமராட்சி, ஜன. 29

நள்ளிரவு வேளையில் வீடு ஒன்றில் கட்டப்பட்டிருந்த பத்தாயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்றைத் திருடியவர்கள் தாம் கொண்டுவந்த சைக்கிளை அருகிலுள்ள ஆலயம் ஒன்றில் விட்டுச் சென்றுள்ளனர்.

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

திருடர்கள் வந்த சைக்கிள் அருகிலுள்ள முதலி அம்மன் ஆலயத்தில் அனாதரவாக கிடக்க காணப்பட்டு பருத்தித்துறை காவல்துறையினரால் மீட்கப்பட்டது.

இதேதினம் அந்த ஆலயத்தில் சிமெந்தினால் கட்டப்பட்டிருந்த உண்டியலும் உடைத்து திருடப்பட்டுள்ளது. (இ-173)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமலர் ஆறுமுகம்

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இடம்பெயர்ந்து உதயநகர் மேற்கு கிளிநொச்சியில் தற்காலிகமாக வசித்தவருமான திருமதி இராசமலர் ஆறுமுகம் 27-01-1996 அன்று அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையா – அன்னப்பிள்ளை தம்பதிகளின் மகளும், செல்லப்பா ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பூபதி குமாரசாமி (கனடா), சின்னையா விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி காயத்திரிதேவி சிவேந்திரன், திருமதி யோகராணி சுந்தரலிங்கம், ஆறுமுகம் கதிர்காமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அரியரட்ணம் சிவேந்திரன், நாகலிங்கம் சுந்தரலிங்கம் (சாந்தி ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்), திருமதி இராசலட்சுமி கதிர்காமநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிபாதரன், சிவறஜீபன், சிராஜினி, கிருஷ்ணராஜ், சுகிர்தா, சுகிர்தராஜ், யதூர்ஷன் (கனடா), யாழினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் நேற்று (28-1-96) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்றன. இத்தகவலை சகலரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. உதயகுமாரன்

மே/பா. மு. சுபேந்திரன்,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.

[40456]

## இரத்தினவடிவேல் ஸ்ரீரங்கநாதன்

வல்வெட்டித்துறை நெடியகாட்டைச் சேர்ந்தவரும், தற்போது மூன்றேக்கர் கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இரத்தினவடிவேல் ஸ்ரீரங்கநாதன் கடந்த வெள்ளிக்கிழமை (26-01-1996) அதிகாலை 1-00 மணிக்குக் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இரத்தினவடிவேல் – பொன்னம்மாவின் செல்வப் புதல்வனும், இராமநாதன் வள்ளியம்மாளின் சகோதரனும், தனலக்சுமியின் கணவரும், ஸ்ரீபத்மநாதன் (முகாமையாளர், இலங்கை வங்கி, மட்டக்களப்பு), ஸ்ரீசண்முகநாதன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற விஜயலக்சுமி, ராஜலக்சுமி (லண்டன்) ஆகியோரின் தந்தையாரும், சற்குணலிங்கம் (இந்தியா), இராமகிருஷ்ணன் (லண்டன்), தெய்வேந்திரராணி (மட்டக்களப்பு), கமலகுமாரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26-01-96) வெள்ளியன்று பி. ப 3 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெற்றன.

தகவல்:
ச. இந்திரன்
(பேரன்)

கனகாம்பிகைக் குளம்,
கிளிநொச்சி.

(சி-3192)

## திருமதி பொன்னம்மா நடராஜா

அளவெட்டியைச் சேர்ந்வரும், ரங்கூனைப் பிறப்பிடமாகவும், 47, பிரப்பங்குளம் வீதியில் வசித்தவருமாகிய பொன்னம்மா நடராஜா நுணாவிலில் நேற்று (28-1-96) சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா நடராஜாவின் (சுங்கத் திணைக்கள அதிகாரி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் நகுலாம்பிகை, விக்னேஸ்வரன் (ஓய்வு பெற்ற பிரந்திய முகாமையாளர், மக்கள் வங்கி). பரமேஸ்வரி, சத்தியபாமா ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-1-96) மு.ப. 10 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
ந. விக்னேஸ்வரன்
(ஓய்வு பெற்ற பிராநதிய முகாமையாளர், மக்கள் வங்கி)

தற்போதைய முகவரி:
T. ரங்கநாதன்,
ஜெகன்நாதன் வீதி,
காளி கோயிலடி,
நுணாவில் மத்தி,
நுணாவில்.

(40029)


மானிப்பாய் இந்து கல்லூரி,
மானிப்பாய் மகளிர் கல்லூரி,
ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாசாலை

பாடசாலை ஆரம்பித்தல்

மேற்படி பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் கலந்துரையாடல்.

இடம்:- உபயகதிர்காமம், தென் புலோலி
திகதி:- 30 - 01 - 1996
நாள்:- செவ்வாய்க்கிழமை
நேரம்:- காலை 10-30 மணி

(சம்பளக் கொடுப்பனவுகளும் அன்று வழங்கப்படும்)

அதிபர், பிரதி அதிபர்கள்.
தென் புலோலி,
பருத்தித்துறை.

(40107)



வரவேற்கின்றோம்



யாழ். இந்துக் கல்லூரி அதிபர்
திரு. இராஜதுங்கம் மகேந்திரன்

யாழ். இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவரான தாங்கள் இக்கல்லூரியின் அதிபராக பதவியேற்றதையிட்டு மனமகிழ்வு அடைகிறோம். தங்களை உவகையோடு வரவேற்கிறோம்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சமூகம்

(சி/3195)



உ
மீனாட்சி அம்மன் துணை

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்கள யுவ வருடம் தைத்திங்கள் 17 ஆம் நாள் புதன்கிழமை (31-01-1996) மிதுன லக்கினத்தில் முற்பகல் **9-24** முதல் **10-36** வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்

மணமகன்
திரு. திருமதி தியாகராசா
தம்பதிகளின் புத்திரன்
இரத்தினசிங்கம்
B.Sc. (Eng.)
அவர்களுக்கும்

மணமகள்
திரு. திருமதி சிவசம்பு
தம்பதிகளின் ஏக புத்திரி
வத்சலா (கீதா)
B.Sc. (Hons)
அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திருமணம் நடைபெறும் இடம்: மணமகள் இல்லம்.
(கச்சாய் வீதி, சாவகச்சேரி.)

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி மா. தியாகராசா,
தாதாவளை,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

திரு. திருமதி க. சிவசம்பு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(40028)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி பகுதிக்கு இடம்பெயர்ந்த மாணவர் கல்விக்கு கொட்டகைகள்

## ரூ. 2 கோடி செலவாகும் என மதிப்பீடு

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு கல்வி அளிக்க வசதியாக விசேட தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்படும். இவற்றை அமைக்க 2 கோடி ரூபா செலவில் திட்டம் ஒன்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவலை கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

வலிகாமம் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள மாணவர்களின் விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சுமார் 20 ஆயிரம் மாணவர்கள் இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்துள்ளனர் என ஆரம்ப மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்து தற்சமயம் கிளிநொச்சியில் பல இடங்களிலும் தங்கியுள்ள இந்த மாணவர்களுக்கு கல்வி அளிக்க 42 பாடசாலைகளில் கொட்டகைகள் அமைக்கவும், குழாய் நீர் வசதி, மலசலகூட வசதி ஆகியவற்றை ஏற்படுத்தவும் வகுக்கப்பட்டுள்ள திட்டத்துக்கே 2 கோடி ரூபா செலவாகும் என மதிப்பீடப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கான நிதியை தந்துதவுமாறு கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் மாகாண கல்வி அமைச்சைக் கேட்டுள்ளார்.

திட்டத்தின் பிரதிகளும் மாகாணசபைக்கு அனுப்பப்பட்டுள்ளன. (இ-3)

### பரீட்சைக்கு தோற்ற த மாணவருக்கு

கடந்த 26 ஆம் திகதி முதல் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்று வந்த ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையின் மனையியல், நடனம் ஆகிய பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சையில் தோற்றாதவர்களை இன்று கிளிநொச்சி கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கேட்டுள்ளார். (இ-3)

# யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளை வவுனியாவிலும் நடத்துவதற்கு ஏற்பாடு

கிளிநொச்சி, ஜன. 29

வடக்குக்கு வெளியே இடம் பெயர்ந்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பரீட்சையில் தோற்ற வசதியாக வவுனியாவில் பரீட்சை நிலையம் ஒன்று அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

வடக்குக்கு வெளியில் தங்கியுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், தாம் பரீட்சைகளில் தோற்ற பரீட்சை நிலையம் ஒன்றை கொழும்பில் அமைக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவைக் கேட்டிருந்தனர்.

இந்த விடயம் குறித்து ஆராயக் கொழும்பு சென்றிருந்த யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கே. குணரத்தினம் பல்கலைக்கழக மானியக்குழு அதிகாரிகளுடனும், இடம்பெயர்ந்து கொழும்பில் தங்கி உள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் பரீட்சை நிலையம் அமைக்க முடியாத நிலை குறித்து தெரிவித்த துணைவேந்தர் வவுனியாவில் உள்ள பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியில் ஒரு பரீட்சை நிலையம் அமைக்க இணக்கம் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கிழக்கு மாகாணத்திலும் வலிகாமத்திலும் உள்ள மாணவர்கள் இந்த பரீட்சை நிலையத்தில் தோற்ற முடியும் என்று துணைவேந்தர் உதயனுக்கு தெரிவித்தார். (இ-3)

# வன்னியில் குழாய்க் கிணறு தோண்ட இயந்திரம் இல்லை

## எடுத்துவர அனுமதி மறுப்பு

கிளிநொச்சி, ஜன. 29

வன்னி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து வந்துள்ள மக்கள் தங்கியுள்ள பகுதிகளில் குழாய்க் கிணறுகள் தோண்டத் தேவையான துளையிடும் இயந்திரத்தை எடுத்து வர அரசு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் இயங்கும் ''ஒக்ஸ்பாம்'' அமைப்பின் சுகாதாரப் பொறியியலாளர் திரு அன்ரீ பாஸ்ரொலி மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னி மாவட்டத்துக்கு வந்துள்ள மக்களுக்கு அவசர தேவையாகவுள்ள குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க குழாய்க்கிணறுகளை அமைத்துக் கொடுப்பதற்கு தமது அமைப்பு முடிவு செய்ததாகவும்—

குழாய்க்கிணறுகளை விரைவாகத் தோண்ட கொழும்பில் இருந்து துளையிடும் இயந்திரத் தொகுதியை எடுத்து வர அரசிடம் அனுமதி கோரியதாகவும்—

அதை எடுத்துவர அரசு அனுமதி வழங்கவில்லை என்றும்— அவர் தெரிவித்தார்.

இந்த இயந்திரத் தொகுதியை எடுத்துவர அரசு அனுமதி அளித்திருந்தால் விரைவாக குழாய்க் கிணறுகளை அமைத்திருக்க முடியும் எனத் தெரிவித்த அவர், இங்குள்ள உள்ளூர் முறைப்படி குழாய்க் கிணறுகளை தோண்ட பேச்சுக்கள் நடைபெறுவதாகவும் கூறினார். (இ-3)

### கிளிநொச்சி அரச ஊழியர் கொடுப்பனவு

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி மாவட்ட அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் ஆகியோருக்குக்கான ஜனவரி மாத கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

மத்திய அரசுக்குக்கீழ் பணியாற்றும் அரச ஊழியர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் கொடுப்பனவுகள் வழங்க 16 லட்சம் ரூபாவுக்கான கட்டுநிதி வந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### வடமராட்சிப் பகுதியில் கடற்றொழில் பாதிப்பு

அல்வாய் ஜன. 29

வடமராட்சி கடற்பிரதேசத்தில் படையினர் நடத்தும் தாக்குதல்கள் ரோந்து நடவடிக்கைகள் காரணமாக கரையோர மீனவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்.

மீனவர்கள் கடலில் சென்று மீன் பிடிக்க தயக்கம் காட்டுவதால் மீன்சிறிய அளவிலேயே சந்தைக்கு வருகின்றது.

பொலிகண்டி, சக்கோட்டை, இன்பருட்டி, மற்றும் சுப்பர் மடம் பகுதிகளுக்கு மீன் கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகள் மீன் கொள்வனவுக்காக போட்டி போட வேண்டியுள்ளதாம். (இ-152)

### ப ல் வைத்தியர் இல்லை

கரணவாய், ஜன. 29

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நீண்ட நாள்களாக பல் வைத்தியர் இல்லை. இதனால் இந்த வைத்தியசாலையின் பல் வைத்தியப் பிரிவு மூடப்பட்டுள்ளது.

படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி இவ்வைத்தியசாலைக்கு பல் வைத்தியர்கள் வர அச்சம் தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலைப் பிரதேசத்தை பாதுகாப்பு வலயமாக்க வைத்தியசாலை வட்டாரங்கள் எடுத்த முயற்சி பயனளிக்காதது தெரிந்ததே. (இ-80)

### விழுந்து காயம்

மந்திகை ஜன. 29

கோழி பிடிக்க மாமரத்தில் ஏறியவர் தவறிக்கீழே விழுந்து காயமடைந்தார்.

மட்டுவில் தெற்கில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் ஸ்ரீஸ்க்காந்தராசா (வயது 50) என்பவரே காயமடைந்தவராவார். (உ-15)

### கச நோயாளர்களை சிகிச்சைபெற அறிவுறுத்து

கசரோகத்துக்காக சிகிச்சைபெற சாவகச்சேரி கசரோக சிகிச்சை நிலையத்துக்கு வரும் நோயாளிகள் கிரமமான முறையில் சிகிச்சைக்கு சமுகமளிப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் தாமதமின்றி சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரி மார்புநோய் சிகிச்சை நிலையத்துக்கு வந்து சிகிச்சை பெறுமாறு கசரோகததடை வைத்திய உத்தியோகத்தர் டாக்டர் கே. மகேசன் கேட்டுள்ளார். (இ-7-117)

# செஞ்சிலுவை சங்க மருத்துவ சேவை வன்னியில் ஸ்தம்பிக்கும் அபாயம்

## இன்னும் 6 வார மருந்துக் கையிருப்பே உள்ளதாம்

கிளிநொச்சி, ஜன 29

வன்னி மாவட்டத்துக்கு மருந்துவகைகளை எடுத்துவர அரசு அனுமதி அளிக்காது விட்டால் வன்னி மாவட்டத்தில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் மருத்துவப் பணி இன்னும் 6 கிழமைகளில் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படும்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் கிளிநொச்சி அலுவலகத்தில்பணி யாற்றும் வன்னி மாவட்ட மருத்துவ இணைப்பதிகாரி ரீட்டா லொயேச்சர் உதயனுக்கு இப்படித் தெரிவித்தார்.

கிளிநொச்சி அலுவலகத்தில் அவரைச் சந்தித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் செயற்பாடுகள் குறித்து கேட்டபோதே அவர் இப்படித்தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பகுதிகளில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் 6 மருத்துவக் குழுவினர் நடமாடும் சேவையை மேற்கொண்டு வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்கள், மற்றும் பொது இடங்களுக்கு இக்குழுவினர் சென்று சேவையாற்றி வருகின்றனர்.

இந்த சேவையை மேற்கொள்ள 6 வாரங்களுக்கு போதுமான மருந்து வகைகளே தற்போது கையிருப்பில் உள்ளன.

மருந்து வகைகளை எடுத்துவர அரசாங்கம் விதித்துள்ள தடையை அரசு மறுபரிசிலனை செய்யாது விட்டால் —

ஆறு வாரங்களுடன் எமது இந்த எமது சேவை ஸ்தம்பிக்கும் நிலை தோன்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களின் தேவையை எடுத்துக் கூறி அரசுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் கூறினார். (இ-3)

### சிறுவர் பாதுகாப்பு நிதியம் கிணறுகளைத் திருத்தும்

தென்மராட்சிப் பிரதேசத்தில், பராமரிப்பு இல்லாமல் பழுதடைந்த நிலையில் உள்ள கிணறுகள், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் திருத்தப்பட உள்ளன.

இப்படியான கிணறுகள் திருத்தப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு விடப்படும்.

இத்தகைய கிணறுகள் பற்றிய விவரங்களை சாவகச்சேரி பிரதேச செயலகத்திலும், சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திலும் அறிவிக்குமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (இ-117)

★ உங்கள் அபிமான நாளிதழ் ★

உதயனின் கிளிநொச்சி கிளை நிலையம்

கண்டி வீதியிலுள்ள கிளிநொச்சி வை. எம். சி. ஏ. கட்டடத்தில் இயங்குகிறது.

வன்னியில் விளம்பர, விநியோக, செய்தி விடயங்களுக்கு கிளிநொச்சி கிளை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சொனி T V., நஷனல் டெக், T. V. S. சாம் (இந்தியன் தயாரிப்பு) மோட்டார் சைக்கிள், சிங்கர் தையல் மெஷின், ஏஸியா லேடீஸ் சைக்கிள். விலாசம் A. ஜெயபாலன், C/o வி. கமலாதேவி, சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (40273)

T. V. S. புதிய ஆண்கள் சைக்கிள் மற்றும் புதிய றொபின் 15 வாட்டர் பம் ஆகியன விற்பனைக்குண்டு க. அரசரத்தினம், C/o செ. முத்தையா (ஆசிரியர்), பொன்னம்பலம் வீதி, கல்வயல், சாவகச்சேரி. (40274)

1995ஆம் ஆண்டு நடந்து முடிந்த கணிதம், தம்ழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வர்த்தகம் (O/L) வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.8, நவீன சந்தை (உட்புறம்) சாவகச்சேரி. (சி.2954)

### காணி விற்பனைக்கு

தும்பளையில் உள்ள லூர்து மாதா கோவிலுக்கு அருகாமையில் உள்ள காணி 5½ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சச்சிதானந்தம், மூத்த தம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (40098)

### தேவை

பெண் அறிவிப்பாளர்கள், குரல் வளம் உள்ளோர் மட்டும் விண்ணப்பங்களை நேரில் கையளிக்கவும். மணிக்குரல் விளம்பர சேவை, நவீன சந்தை மேல் மாடி, சாவகச்சேரி. (சி-2951)

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவமுள்ள ஆங்கில சுருக்கெழுத்தாளர் உடனடியாகத் தேவை. தாமாகவே கடிதங்கள் வரைந்து செயற்படக்கூடியவராக இருக்க வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இல.522, மே/பா உதயன், சரசாலை தெற்கு. (40242)

றெட் இந்தியன் சீவ் Red Indian (Chief) மோட்டார் சைக்கிள் அல்லது அதன் உதிரிப்பாகங்கள் உடன் தேவை. தொடர்பு: செ. சந்திரசேகரம், சைனீஸ் உணவகம், கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-2956)

### தாதி தேவை

வைத்திய நிலையத்தில் கடமையாற்ற பெண் தாதி தேவை. பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம். விவரங்களுக்கு நேரில். முருகானந்தா வைத்திய நிலையம், 8ஆம் கட்டை, வரணி (மகாவித்தியாலயம் முன்). (40022)

### சாயி போட்டோ

சாயி போட்டோ, 1010/17, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடியில் புகைப்படம் பிடித்தவர்கள் புகைப்படங்களைப் பெற்றுக்கொள்ளவும். சாயி போட்டோ, கரன் ஆட்ஸ், கந்தையா வீதி (சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை முன் வீதி). (40027)

### தோல் கருவிகள்

சகலவிதமான தோல் கருவிகளும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். இந்திரன் மிருதங்க தொழிலகம், 156ஆம் கட்டை, கிளிநொச்சி. (40454)

---

கிளிநொச்சி வந்த ஓய்வூதியரின்

# ஜனவரி கொடுப்பனவு இன்னும் இல்லை

கிளிநொச்சி, ஜன. 29

வலிகாமத்தில் இருந்து கிளிநொச்சிக்கு வந்துள்ள ஓய்வூதியர்களில் 840 பேருக்கு ஜனவரி மாத ஓய்வூதியம் வழங்கத் தேவையான நிதி வந்து சேரவில்லை என்று கிளிநொச்சி செயலக அதிகாரி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்து வந்த ஆயிரத்து 200 ஓய்வூதியர்களில் கடந்த டிசம்பர் 10 திகதி வரை செயலகத்தில் பெயர்களை பதிவு செய்த 840 ஓய்வூதியர்களுக்கு நவம்பர், டிசம்பர் மாதத்துக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டதாகவும் —

ஜனவரி மாதத்துக்கான கொடுப்பனவு வழங்க நிதி வந்து சேரவில்லை என்றும்— செயலகக் கணக்காளர் திரு. எஸ். பாலகுமார் தெரிவித்தார்.

ஜனவரி மாதத்துக்கான ஒதுக்கீடோ, கட்டுநிதியோ வந்து சேரவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## பூநகரி கல்விக் கோட்ட அதிபர் கூட்டம்

பூநகரி கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில்இடம்பெயர்ந்த மாணவர் விவரம், மாணவர் சீருடை, இலவச பாட நூல் விநியோகம் தொடர்பாக ஆராயப்படும். (இ-3)

## சந்திக்கவும்

**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய** ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல், கரவெட்டி லூர்து மடத்தில் **31 – 01 – 1996** புதன் கிழமையே (மு. ப. 10. மணிக்கு) நடைபெறும்.

நேற்றைய உதயன் 4 ஆம் பக்கத்தில் வெளியான 'சந்திக்கவும்' விளம்பரத்தில் 30-01-1996 என்று பிரசுரமானது தவறாகும்.

## செப்ரிசீமியா: 4 மாத குழந்தை மரணம்

வடமராட்சி, ஜன. 29

செப்ரிசீமியா நோயினால் நான்கு மாதக் குழந்தை ஒன்று வெள்ளியன்று மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் மரணமானது.

மூளாய் மேற்கு செம்மைக் கட்டுவனிலிருந்து இடம் பெயர்ந்து மீசாலை கிழக்கில் வசித்துவந்த யோகநாதன் நிருபா என்ற குழந்தையே மரணமானதாகும்.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு அனுமதிக்கப்பட்டஇந்தக்குழந்தை சில மணி நேரத்தில் மரணமானது. (இ-173)

---

## அருட்தந்தை க. யோன் லொறட் 31 ஆம் நாள் நினைவுப்பலி அறிவித்தல்

மேற்படி இரங்கற் திருப்பலி 31-01-1996 (புதன்) காலை 7-00 மணிக்கு புனித பிலிப்புநேரியார் ஆலயம் செம்பியன்பற்றிலும், யாழ். பேராலய மக்களால் ஒழுங்கு செய்யப்படும் இரங்கற்பலி 01-02-1996 (வியாழன்) காலை 7-00 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயம் மிருசுவிலிலும் இடம்பெறும்.

செபிப்பதற்கு அனைவரையும் அழைக்கிறோம்

அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ்
அருட்திரு யாவிஸ்

(40275)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் கந்தையா கணேசு

(இணுவில் கிழக்கு, மஞ்சத்தடி)

தோற்றம்: **06 – 07 – 1915** மறைவு: **31 – 12 – 1995**

பாசமெனும் உரத்தில் வளர்த்து, எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத நினைவுடன் எம்மை விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

30 - 01 - 1996 செவ்வாய்க்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

க. முருகையா
(G. S.-கோண்டாவில் மேற்கு,)
C/o கந்தையா-Registrar
மறுவன்புலவு, கைதடி,
நாவற்குழி

(40019)

---

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்துக்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு இன்று காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை கேட்டுள்ளது.

★ சி. தம்பித்துரை — 309/01, கண்டி றோட், அரியாலை.

★ செல்வி நர்மதா தனபாலசூரியர் — 32, கதிரவேலு ஒழுங்கை, அரியாலை

★ திருமதி பூமணி பாலசிங்கம் — மே/பா. சினித்தம்பி, 695, கண்டி வீதி, அரியாலை.

★ பி. சண்முகலிங்கம் — 44, இலந்தைக்குளம் வீதி, அரியாலை.

★ திருமதி தெய்வநாயகி இலக்ஷ்மி தேவன் — இல. 5, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.

★ திருமதி நிதிலா சுகுணன் — 159/04, ஈச்சமோட்டை பீச் றோட், பாஷையூர்.

★ யாக்கோப் சவரியம்மா (பாலா) — 11B, தொடர் மாடிக் கட்டடம், குருநகர்.

★ க. மயில்வாகனம் — 31, நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை.

★ திரு. செல்லத்துரை பாலேந்திரா — 3, முதலாம் குறுக்கு வீதி, பாஷையூர்.

★ திருமதி சா. பன்னீர்ச்செல்வம் — 5, நான்காம் குறுக்கு வீதி, கொழும்புத்துறை.

★ திருமதி திருநாவுக்கரசு (கமலா) — 3/3, இரண்டாம் குறுக்குத் தெரு, சொழும்புத்துறை.

★ கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் — 10A, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.

★ சுந்தரம்பிள்ளை தனபாக்கியம் — 290, கொழும்புத்துறை கிழக்கு.

★ S. ஜோசவ் — 7/8, நான்காம் குறுக்குத் தெரு, குருநகர்.

★ க. மனுவல் — 7/1, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

★ திரு. தம்பிப்பிள்ளை சின்னத்துரை — 208, ஆறாம் குறுக்குத் தெரு, மணியந்தோட்டம், கொழும்புத்துறை.

★ திருமதி கந்தசாமி சிவபாக்கியம் — இலகடி, கோப்பாய் வடக்கு.

★ சு. சிவபாதம் (தபாலதிபர், கோப்பாய்) — கோப்பாய் வடக்கு.

★ திருமதி கமலாம்பிகை குமாரசுவாமி — ''ரூபி பவனம்'', சிவன் கோவிலடி, கோப்பாய் தெற்கு.

★ திரு. எஸ். நடராசா (C.T.B.) — டச் றோட், கோப்பாய் தெற்கு.

★ கந்தன் செல்வன் — பாடசாலை வீதி, அச்சுவேலி வடக்கு.

★ திரு. பூரணானந்தசிவம் — நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ ந. கந்தையா — வட்டு கிழக்கு, சித்தங்கேணி.

★ தவராணி கணேசராஜா — கலைநகர், வட்டு கிழக்கு, சித்தங்கேணி.

★ மு. மாணிக்கவாசகர் — குலனை ஒழுங்கை, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

★ கி. அல்வீனஸ் மரியம்மா (சுவீ) — சில்லாலை வடக்கு, பண்டத்தரிப்பு.

★ செ. இளையதம்பி — வட்டு. கிழக்கு, சித்தங்கேணி.

★ இ. சோதிலிங்கம் — இராமநாதர் கடை, சுழிபுரம் கிழக்கு.

★ ந. க. தங்கரத்தினம் (அதிபர்) — கலைநகர், சித்தங்கேணி.

★ செல்வி சு. திருவேணி — தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்

★ எம். விஸ்வலிங்கம் — உரும்பராய் கிழக்கு.

★ சி. நவரெட்னம் — கலைவாணி றோட், கோண்டாவில் வடக்கு.

★ வி. மகாலிங்கம் — கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு.

★ திருமதி சி. குமரேசு — சங்நவேலி பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய்.

★ திரு. நடராசா சூரியநாதன் அல்லது திருமதி பத்மாசனி விசுவலிங்கம் — மருதடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

★ சின்னம்மா சுந்தரம் — லோட்டன் வீதி, மானிப்பாய்.

★ மாரிமுத்து பொன்னையா — கரம்பன் தெற்கு, ஊர்காவற்துறை.

★ சி. ஆறுமுகம் — சண்டிலிப்பாய் றோட், பெரிய விளான், இளவாலை.

★ திருமதி பா. அருந்ததிஅம்மாள் — மே/பா கே. இராசரட்ணம், ஆடியபாதம் முதலாம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு.

★ செல்லப்பா இராசரட்னம் — சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.

★ மு. செல்வரட்ணம் — அம்பலவாணர் வீதி, உடுவில் தெற்கு.

★ மா. நவரத்தினம் — உடுவில், சுன்னாகம்.

★ ச. நவரட்ணம் — செல்லவளவு, சுன்னாகம்.

★ கனகம்மா முத்துவேலு — 12/01, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

★ திருமதி ராஜேஸ்வரி நாகராஜேஸ்வரன்(பொறியியலாளர் - நீர்வழங்கல்) 13/03, நாயன்மார் வீதி, நல்லூர்.

★ தவமணிதேவி மகேஸ்வரன் — 20/04, சிவகுருநாதர் லேன், பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

★ த. கதிர்காமநாதன் – 21, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை.

★ க. ரகுநாதன்—23/01, முதலியார் லேன், நல்லூர் தெற்கு.

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## கணக்குப் பார்த்தென்ன?

இப்போது நாட்டில் நடைபெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மூன்று மடங்கு படையினரும், மூன்று மடங்கு பணமும் தேவை.

இவ்வாறு கணக்குப் பார்த்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

போருக்கு அந்தளவு பெரிய தொகையை செலவிட்டால் தேசத்தின் அபிவிருத்திப் பணிகள் அனைத்தையும் நிறுத்த வேண்டி ஏற்படும். — என்பதனையும் அவர் எடுத்துரைத்திருக்கிறார்

அபிவிருத்திப் பணிகள் மட்டும் பாதிக்கப்பட்டு விடா. நாட்டின் உற்பத்தி அதள பாதாளத்துக்கு வீழ்ச்சியடையும். வாழ்க்கைச் செலவு சந்திர மண்டலத்துச்கு அப்பாலும் உயர்ந்து செல்லும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். தெற்கிலும் பசி பஞ்சம் கோரத் தாண்டவமாடும். அங்கும் மக்கள் புரட்சி வெடிக்கும். இதனைச் சந்திரிகாவும் உணர்ந்திருப்பார்

1990ஆம் ஆண்டு ஜூன் தொடக்கம் 1994 ஓகஸ்ட் மாதம் வரையில் போருக்காக 11,100 கோடி ரூபா செலவிடப்பட்டது. ஆனால் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு மொத்தம் 5,550கோடி ரூபா மட்டுமே செலவாகியது.

போர் நடைபெறாவிடில் மகாவலி போன்ற பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்தி இருக்கலாம்.

நாட்டின் பொருளாதாரம் குட்டிச்சுவராகி, மக்களின் வாழ்க்கை நிலை சீரழிந்து போனாலும் பரவாயில்லை; தமிழர்களுக்குச் சேரவேண்டிய நியாயமான உரிமைகளை வழங்கக்கூடாது என்ற வஞ்சகப் போக்கையே சிங்கள அரசியல் தலைவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

போருக்கான செலவைக் கணக்குப் பார்த்திருக்கும் சந்திரிகா அவர்களில் இருந்து புறம்பானவர் அல்லர்; விதிவிலக்கானவருமல்லர். சகல சிங்கள அரசியல் தலைவர்களும் சிங்கள - பௌத்த பேரினவாதச் செல்வாக்கு எனப்படும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தைவிட, சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் முப்படைகளை நவீன ஆயுதமயப்படுத்துவதற்காகப் பெரும் பணம் செலவிடப்படுகிறது.

1995 ஏப்ரல் மாதத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்த பின்னர் மட்டும்—

ஆயுதக் கொள்வனவுக்காக சுமார் 450 கோடி ரூபாவை சந்திரிகா அரசு செலவிட்டுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தளவு பெருந்தொகைப் பணம் அந்நிய நாடு ஒன்றை கைப்பற்றுவதற்காகச் செலவாகவில்லை. மாறாக தமிழ் மக்களின் மண்ணைக் கைப்பற்றுவதற்கும்— ஆக்கிரமிப்பதற்கும்— அவர்களின் உரிமைகளைப் பறிப்பதற்குமாகவே நாட்டின் இவ்வளவு செல்வமும் விரயமாக்கப்படுகிறது!

நிலத்தில் சிந்திய பால் திரும்பக் கலசத்துக்கு வருமா? போருக்கான செலவை இனியாவது நீக்க வேண்டுமெனில் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

தான் விதிவிலக்கான சிங்களத் தலைவர் என்று சந்திரிகா காட்ட விரும்பினால், போரை உடனே நிறுத்த வேண்டும். செய்வாரா?

# விமானங்களுக்கு ஏற்பட்ட இழப்பால் முப்படைகளின் சமநிலை பாதிப்பு

கொழும்பு, ஜன. 29

ஸ்ரீலங்கா வான்படை அடிக்கடி சந்தித்து வரும் பேரிழப்புக்களால் முப்படைகளினதும் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் விமானப்படை சந்தித்து வரும் இழப்புகள் மிக அதிகமாகும்.

முன்னர் கடற்படையினர் அதிகப்படியான இழப்புகளைச் சந்தித்தனர். கடற்கரும்புலிகளின் தாக்குதல்களால் அனைத்து கடற்கலங்களும் இன்று சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அப்போதெல்லாம் விமானப்படை வடக்கு - கிழக்கு இராணுவத்துக்கு பக்கபலமாக இருந்தது. இதனால் முப்படைகளினதும் சமநிலை மூன்றாம் ஈழப்போருக்கு முன்னர் அவ்வளவாகச் சிதைவடையவில்லை.

தற்போது விமாப்படை, விமானங்களை மட்டுமன்றி அனுபவம் மிக்க அதிகாரிகளையும் இழந்துள்ளது.

இந்த ஆரோக்கியமற்ற நிலை ஸ்ரீலங்காவின் பாதுகாப்பில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

— இப்படி அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது (இ-7)

## பட்டம் விட்ட சிறுவன் விழுந்து காயம்

மந்திகை, ஜன 29

பறக்க விட்ட பட்டத்தை வேப்பமரத்தின் உச்சியில் கட்டுவதற்காக ஏறிய சிறுவன் அந்த மரத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்து காயமடைந்தான்.

கைதடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து கைதடியில் வசிக்கும் கந்தையா துஷ்யந்தன் (வயது 12) என்ற சிறுவனே காயமடைந்தான்

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ-15)

## படையினருக்கு விருது வழங்குவதில் மோசடி!

கொழும்பு, ஜன. 29

முப்படையினருக்கு வீரதீர விருது வழங்கும் விடயத்தில் மோசடிகள், தவறான நடைமுறைகள் இடம்பெற்றிருப்பதாகவும்—

இது களத்தில் உள்ள படையினர் மற்றும் சிப்பாய்களுக்கு வெறுப்பையும், விசனத்தையும், கோபத்தையும் ஊட்டியுள்ளதாகவும்—

கொழும்பு ஆங்கில தினசரி ஒன்று தெரிவித்தது.

களத்தில் சாதனைகள் புரிந்த பல படையினரை புறந்தள்ளி விட்டு—

களத்துக்குச் செல்லாத — எதிரிகளை எதிர் கொள்ளாத — ஆளணி மற்றும் திட்டப் பகுதிகளில் கடமை புரிந்த படையினர் பலர் பின்கதவால் விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக இராணுவ உயர் வட்டாரங்கள் சில தகவல் வெளியிட்டன.

1983 ஆம் ஆண்டு முதல் இதுவரை படையினர் நிலை நாட்டிய சாதனைகளுக்காக வழங்கப்படும். வீர தீர விருதுகளுக்கு ஆயிரத்து இருநூறு பேரை அரசு தெரிவுசெய்துள்ளது. அவர்களில் சிலருக்கு மறைவுக்குப் பிந்திய விருது வழங்கப்படவிருக்கின்றது.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி—ஸ்ரீலங்கா சுதந்திர தினத்தன்று — பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களுக்கு விருதுகளை வழங்கவுள்ளார்.

## கிறீஸில் நீலன், டக்ளஸ்

கொழும்பு, ஜன. 29

நேற்று முதல் ஐந்து நாள்கள் கிறீஸில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கூட்டணி எம். பியான நீலன் திருச்செல்வம், ஈ. பி. டி. பியின் எம். பியான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உட்பட இருபது எம். பிக்கள் பங்குபற்றுகின்றனர்.

ஜனநாயகம், அரசமைப்பு, நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்துதல் ஆகியன சம்பந்தமான மாநாட்டிலேயே அவர்கள் பங்குபற்றுகின்றனர். (உ)

## ஏறாவூர்ப் பகுதியில் பொலீஸ் காவலரண்களின் பாதுகாப்புத் தீவிரம்!

கொழும்பு, ஜன. 29

ஏறாவூர்ப் பகுதியிலுள்ள பொலீஸ் காவலரண்கள் அனைத்தினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை ஏறாவூர் சிரட்டையன்குடா பொலீஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (உ-7)

## போதையில் விழுந்தவர் மரணம்

மந்திகை, ஜன. 29

மது போதையில் விழுந்து தலையில் படுகாயமடைந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

மட்டுவில் அம்மன் கோவிலடியைச் சேர்ந்த செல்லப்பா கிருச்செல்வம் (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 21ஆம் திகதி மது போதையில் வந்த இவர் தடக்கி விழுந்து கீழே கிடந்த மரக்குற்றியில் மோதி தலையில் படுகாயமடைந்ததாக உறவினரால் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த இவர் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தபோதே நேற்று முன்தினம் இரவு அங்கு மரணமானார். (உ-15)

## வான்-சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்

பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதி, அல்வாய் தெருமூடி மடம் சந்திக்கும் மாலி சந்திக்கும் இடையில் ஏற்பட்ட வான்—சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் காலை 10 மணி அளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

இதில் சைக்கிளில் சென்றவரான, அல்வாயைச் சேர்ந்த சுப்பையா சபாரத்தினம் (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ((இ-15)

## செயலகக் களஞ்சியத்திலிருந்து வியாழனன்று திருடப்பட்ட 6 பருப்பு மூடைகள் மீட்பு!

யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவின் சாவகச்சேரி இந்துக் கல்லூரி களஞ்சியத்திலிருந்து திருடப்பட்ட ஆறு மூடை மைசூர் பருப்பு மீட்கப்பட்டுள்ளது; அதைத் திருடியவர்கள் என்று கூறப்படும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழன் இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய சாவகச்சேரி காவல் நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் திருட்டுப்போன மைசூர் பருப்பு மூடைகளையும் மீட்டனர்.

இந்த மூடைகள் திருடப்பட்டவை என்று தெரிந்தும் அவற்றைக் கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் சாவகச்சேரி நகர வர்த்தகர் ஒருவரும் காவல்துறையினரால் விசாரணை செய்யப்படுவதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

# சட்ட ஆவணம் குறித்து கூட்டணிக்குள் பிளவு

## ஒரு பிரிவினர் எதிர்க்கின்றனர்

கொழும்பு, ஜன. 29

சந்திரிகா அரசு வெளியிட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் சட்ட ஆவணம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் கருத்து முரண்பாடுகள் தோன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இந்தச் சட்ட ஆவணம் குறித்து தனது நிலைப்பாட்டை முடிவுசெய்ய தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த 22ஆம் திகதி கொழும்பில் கூடியதாகவும்—

அப்பொழுது சட்ட ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சில யோசனைகளை கூட்டணி உறுப்பினர்களில் சிலர் எதிர்த்ததாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

பிராந்திய சபைகளுக்கான அதிகாரங்கள் எந்த வகையிலும் ஏற்புடையவை அல்ல என்றும்—

கடந்த ஓகஸ்ட் மாதம் அரசு வெளியிட்ட யோசனைகளுக்கும் தற்போதுவெளியிட்டுள்ள சட்ட ஆவணத்துக்கும் இடையில் பெரும் வேறுபாடு இருப்பதாகவும்—

பிராந்திய அரசின் நிர்வாகத்தில் மத்திய அரசு தலையிட அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் சட்ட ஆவணத்தை எதிர்ப்போர் தெரிவிக்கின்றனராம்.

இருந்தாலும் தற்போதைய சட்ட ஆவணம் ஒரு முன்னோடியான திட்டம் என்று இதனை ஆதரிப்போர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கவேண்டியது அவசியம் என்றும் இவர்கள் கருதுகின்றனராம். (இ-7)

## நிதித்துறை...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ர. ராஜி — 35/15 ஐந்தாம் ஒழுங்கை, அரசடி றோட், கந்தர்மடம்.

★ திருமதி ச ஏரம்பு — 39, பாரதி வீதி, கச்சேரி—நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.

★ க. செல்லத்துரை - 30/03, நிக்லஸ் ஒழுங்கை, கச்சேரி — நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி சூ. றோசலியா — ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம்.

★ திருமதி எம். இராசமணி — 100, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ பி, சத்திவேல் — 9, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை.

★ எஸ். கணபதிப்பிள்ளை பரம்ஜோதி — கணபதி ஸ்ரோஸ், 18 (40), கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்.

★ பி. கந்தையா — 05, பென்டிக்கோஸ் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ சி. ஜேசுராஜன் — 60, ஆசிர்வாதப்பர் வீதி, நல்லூர்.

★ திருமதி ஈஸ்வரி சின்னத்துரை — 232/06, சேர்ச் லேன், ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

★ திருமதி கனகரெத்தினம் (ஆட்டிஸ் மணியம்)— 55, செட்டித்தெரு, நல்லூர்.

★ செ. அரிச்சந்திரன் — 111, நாயன்மார் வீதி, நல்லூர்.

★ க. யேசுதாசன் பேபி ஆன் — 823, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ சோமு ஜெகசோதி — புத்தூர் வடக்கு.

★ திருமதி நாகேஸ்வரி இராசசேகரம் — மே/பா, திரு. கணபதிப்பிள்ளை, ''செந்தில்'', அச்சுவேலி தெற்கு.

★ ஜெயராசா பத்மசோதி — நீர்வேலி வடக்கு.

★ ந. கருணாகரன் (C. T. B.)— நீர்வேலி வடக்கு.

★ அன்னலட்சுமி கனகசபை (சுதாயினி) — மந்திகை வைத்தியசாலை, இரண்டாம் வாட், பருத்தித்துறை.

★ கந்தையா மார்க்கண்டு — அன்னை இல்லம், கரவெட்டி மேற்கு.

★ இராமநாதன் வேலுப்பிள்ளை—மே/பா, வேலும் மயிலும், போதினி வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை ரீதியாக கலந்துரையாடல்கள்

சாவகச்சேரி, ஜன. 29

பல்வேறு இடம்பெயர்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்களை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதற்கு அழைத்துள்ளனர். ஒவ்வொரு பாடசாலைகளினதும் கலந்துரையாடல்கள் நடைபெறும் இடங்கள், நேரங்கள் வருமாறு:-

★ அராலி இந்துக்கல்லூரி:- நாளை காலை 10 மணிக்கு மட்டுவில் தெற்கு, சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில்.

★ சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி:- நாளை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி ம. ம. வியில்.

★ யாழ். கனகரத்தினம் ம. ம. வி.:- நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்.

★ இராமநாதன் கல்லூரி;- நாளை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்.

★ வயாவிளான் ம.ம.வி:- நாளை காலை 10 மணிக்கு அலுவலகத்தில்.

★ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்:- இன்று காலை 10 மணியளவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில். (உ)

## புதிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறுவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னரே றோஹான் தளுவத்தை ஓய்வு பெற்று விடுவார் என்பதால்—

அசோக ஜெயவர்த்தனா லெப்டினன்ட் ஜெனரல் பதவி உயர்வுடன் புதிய இராணுவத் தளபதியாக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-6)

# மட்டு.நகரில் பார்ஸல் குண்டு!

மட்டக்களப்பு நகரில் பிரதான பஸ் நிலையத்துக்கு எதிரே நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு பார்ஸல் குண்டொன்று வெடித்தது இதனால் மூன்று பொது மக்கள் காயமடைந்தனர். காயமுற்றோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பொ.ஐ. முன்னணி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின் போது — மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் மூன்று முக்கிய பிரச்சினைகளை அமைச்சர் தொண்டமான் முன்வைத்து கருத்துக்களை வெளியிட்டதாகவும் —

அவற்றைத் தீர்த்து வைக்க இயன்ற விரைவாக உரிய நடவடிக்கைகளை எடுக்க ஜனாதிபதி சந்திரிகா உறுதியளித்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## 23 நாள்களில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் மே 8 ஆம் திகதியுடன் 55 வயதைப் பூர்த்தி செய்கின்றார்.

அதாவது மே 8 ஆம் திகதிக்கு முன்னர் அடுத்த தரத்துக்கு — அதாவது லெப்டினன்ட் ஜெனரல் தரத்துக்கு —அவர் பதவி உயர் பெறாவிட்டால் எதிர்வருவ மே 8 ஆம் திகதியுடன் அவர் ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டி நேரிடும்.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தின் துருப்புகளின் எண்ணிக்கைப்படி இராணுவத்தில் ஒரேயொரு லெப்டினன்ட் ஜெனரல் மட்டுமே — இராணுவத் தளபதி பதவியில் உள்ளவர்கள் மட்டுமே — இருக்க முடியும்.

தற்போது இராணுவத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா மே 31 ஆம் திகதியன்றே ஓய்வுபெறுகின்றார். அவரின் ஓய்வுக்குப் பின்னரே மேஜர் ஜெனரல் தரத்தில் இருக்கும் ஒருவர் லெப்டினன்ட் ஜெனரல் தரத்துக்கு புதிதாக பதவி உயர்த்தப்ப வாய்ப்புண்டு.

ஆனால் அந்த வாய்ப்பை பெறுவதற்கு 23 நாள்களுக்கு முன்னரே — பதவி உயர்வு பெறாத காரணத்தால் — றோஹான் தளுவத்தை இராணுவத்திலிருந்து ஓய்வுபெற்றுச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய இராணுவத் தளபதியின் பதவிக்காலம் எதிர்வரும் பெப்ரவரியுடன் முடிவடைய இருந்ததும் —

ஆனால் அதனை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்க அரசு முடிவு செய்ததும் தெரிந்தவையே.

அந்தக் குறுகியகால பதவி நீடிப்பை அரசு அவருக்கு வழங்காமல் அவரை ஓய்வு பெற அனுமதித்திருந்தால்—

றோஹான் தளுவத்தை லெப்டினன்ட் ஜெனரல் பதவி உயர்வுடன் புதிய இராணுவத் தளபதியாக மார்ச் மாதத்தில் பதவியேற்றிருக்கலாம் என்பதும்—

அப்பதவியை ஏற்றிருந்தால் மேலும் சில ஆண்டுகளுக்கு அவர் சேவையில் இருந்திருக்கலாம் என்பதும்—

மேலும் குறிப்பிடத்தக்கவையாகும். (உ-6)

# முக்கிய அரசியல் பிரமுகரின் பிள்ளையை கடத்த திட்டம்!

கொழும்பில் முக்கிய அரசியல்வாதி ஒருவரின் அல்லது பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் பிள்ளைகளை அல்லது நெருங்கிய உறவினர்களை கடத்திச் சென்று பணயமாக வைத்து சில நிபந்தனைகளை விதிப்பதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டமிட்டிருக்கின்றது.

புலனாய்வுத் தகவல்கள் இதனைத் தெரிவிப்பதாக கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ)

## ஐ. தே. க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று கெரில்லா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆர்ப்பரித்ததை பூரண வெற்றி என்று கூற முடியாது.

கிழக்கு மாகாணத்திலோ பெரும்பாலான பகுதிகள் புலிகளின் வசமாகியுள்ளன. அங்கு 54 மின் மாற்றிகள் சேதமாக்கப்பட்டுள்ளன.— என்றார். (அ)

## ஸ்ரீலங்காவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண மத்திய, மாநில அரசுகள் விரைந்து முயற்சிக்க வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் கோரப்பட்டிருந்தது.

முன்னதாக— கடந்த வெள்ளியன்று மாலை — மாநாட்டின் ஆரம்பத்தில் கட்சிப் பேரணி, ஒரு மாலைப் பொழுதும், இரவு முழுவதும் கழிந்து விடியும் வரையும் திருச்சியில் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (உ-7)

## இணுவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கமல் - திருமலை), கப்டன் ஒளிவதனன் (இராசதுரை ரஞ்சன்- இணுவில் கிழக்கு), 2 ஆம் லெப்டினன்ட் கணேஸ்வரன் (சண்முகம் மகேஸ்வரன் - நுவரெலியா). 2 ஆம் லெப்டினன்ட் பாவழகி அல்லது கிற்ஸ்ரி (ஜேசுதாசன் ஜெசி றெனோல்டா — சின்னப்பண்டி விரிச்சான், மன்னார்), வீரவேங்கை செல்வன் (ஆறுமுகம் கணேஷ், கணேசபுரம், கிளிநொச்சி) ஆகிய ஆறு போராளிகளே வீரச்சாவடைந்தனர். (உ-7)

# சித்த மருத்துவ பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

சாவகச்சேரி, ஜன. 29

சித்த மருத்துவ உத்தியோகஸ்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

தொழிலற்ற — உள்ளகப் பயிற்சியைப் பூர்த்தி செய்த— பி. எஸ். எம். எஸ். பட்டதாரிகள் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம். டாக்டர் ரஸ். பவானி கொழும்பில் இருந்து இது குறிதது அறிவித்துள்ளார்.

கல்வித் தகைமை சம்பந்தமான ஆவணங்களுடன்கிராம சேவையாளரின் சான்றிதழுடனும் ஆயுள்வேத திணைக்களத்துக்குப் பரீட்சார்த்திகள் சமுகமளிக்க வேண்டும்.

வவுனியா சோதனை முகாமிலும் தங்கி நிற்க நேருமாதலால் கடைசி நாள் வரை காத்திருக்காது பயணம் செய்வது உகந்தது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-3)

# பரீட்சை

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீட பரீட்சைகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று விவசாய பீடாதிபதி திரு. அ. நவரத்தினராஜா தெரிவித்தார். [உ-3]

# மரண அறிவித்தல்கள்

## முருகன் மாணிக்கம்

பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகன் மாணிக்கம் நேற்று முன்தினம் 27 - 01 – 96 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 28-01-96 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மதியழகன்
(மகன்)

விஸ்வகுல ஒழுங்கை,
பருத்தித்துறை.

(40108)

## திருமதி மகேஸ்வரி முத்துக்குமாரன்

யாழ்ப்பாணம் பிறவுண்வீதியைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி முத்துக்குமாரன் 27-1-96இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வித்துவான் பொன் முத்துக்குமாரனின் அன்பு மனவியும், திருமதி ஹேமசபேஸ்வரி, திருமதி நிர்மலா, சிவ ஞானசம்பந்தன், தயாநிதி, திருமதி சிவமனோகரி ஆகியோரின் அன்புத் தாயாராவார்.

தகவல்:
பொ. தியாகராசா
(மைத்துனர்)
(பொன்னாலை பிள்ளையர் கோவில்)

ஆ. குமாரசாமி,
கப்புதூ, கரவெட்டி.

(40280)

## வே. க. இராசையா

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த வே. க. இராசையா காலமாகி விட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும் நாகராசா, குவேந்திரநாதன் (ராசா), தர்மபூபதி, குசலகுமாரி, வசந்தகுமாரி, மங்கையர்க்கரசி, பத்மநாதன் (கனடா), பிறேமா, சுபாசினி கனடா), பாஸ்கரன் (கனடா). உதயதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும் கனகலிங்கம், கணேசலிங்கம், சண்முகலிங்கம், தர்மகுலரத்தினம், தர்மலிங்கம் (கனடா), புனிதவதி, ரஞ்சினிதேவி, கலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28 - 01 – 96 ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. நாகராசா
இ. குவேந்திரநாதன் (ராசா)
(மகன்மார்)

தற்போதைய முகவரி;
சின்னத்தம்பி கனகலிங்கம்,
குடமியன்,
வரணி.

(40279)

# மரண அறிவித்தல்

## இராசரத்தினம் சற்குணபாலன்

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் (வெள்ளைக்கண்டர்) - சரஸ்வதி (பூமணி) தம்பதிகளின் மூத்த புதல்வன் சற்குணபாலன் நேற்று (28-01-96) இரவு காலமானார்.

அன்னார் ஜெயமணியின் (ஆசிரியை, நாவலர் பாடசாலை, கோப்பாய்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரேணுகாதேவி, இந்திரலோஜினி (ஆசிரியை, இராமநாதன் பெண்கள் கல்லூரி — கொழும்பு), சிவமோகனபாலன் (சுவிற்ஸர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமணி (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தா), மனோன்மணி (ஆசிரியை, கோப்பாய் நாவலர் பாடசாலை), யோகமணி, சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற திரு. திருமதி வைரமுத்து கந்தையா (ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மருமகனும், தர்மரத்தினம் (உரும்பராய் அஞ்சலகம்), இராசையா சிறிகுமார் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 29 –1- 96 பிற்பகல் 2-00 மணிக்கு கைதடி நுணாவில் குச்சப் பெட்டி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி ஜெயமணி
(மனைவி)

தற்போதைய முகவரி;
மே/ பா. கதிரவேலு அருளம்பலம்,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி,
(அறவழிச் செயலகம் முன்பாக)
சங்கர் வீதி.

40281)

2 ஆம் பக்கத்திலும் மரண அறிவித்தல்கள்

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளின் சங்கமமாக விளங்குகின்ற

யாழ். ராசி சில்க்ஸ் (ராசி பட்டுச் சோலை)

தற்பொழுது இரு வேறு இடங்களில்

ராசி சில்க்ஸ்,
(புகையிரத நிலைய முன்பாக)
கொடிகாமம்.

(பட்டுப் புடைவைகளின் சங்கமம்)

ராசி சில்க்ஸ்,
(மகாத்மா திரையரங்கு முன்பாக)
நெல்லியடி.

(சி/2943)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்)லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிக பணிமனையில் 29-01-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.